**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்**

-----------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்கேடுளைப் பேணியிருந்ததுடன், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக் கூற்றுக்களின் மீது ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தின் நிலைவரம், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு, காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று, நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 உயர் கணக்கீட்டு நடைமுறைகள்

நிறுவகத்திற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின் பிரகாரம் செலுத்த வேண்டி ஏற்படக்கூடிய நிகழத்தக்க பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பகவந்தலாவை பயிற்சி நிலையத்தின் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய பேரேட்டில் வேறான கணக்குகு பேணப்பட்டிராததுடன் இப் பயிற்சி நிலையத்திற்குரிய செலவினத்தை பேரேட்டுகக் மாற்றும் போது ரூபா 1,525,545 தொகையான வேறுபாடு நேர்ந்திருந்தது.

## 1.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1979 இன் 45 ஆம் இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவக அதிகாரச் சட்டம் | அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்ட பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான பணிப்பாளர் பதவி 2010 ஒக்தோபர் 12 ஆம் திகதி முதல் இந்நாள் வரை வெற்றிடமாகக் காணப்பட்டது. |
| (ஆ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு வருமான வரி அதிகாரச்சட்டத்தின் 153 ஆம் பிரிவு | ரூபா 50,000 இற்கு மேலதிகமான கொடுப்பனவுகள் தொடர்பாக பிடித்து வைத்தல் வரி கழிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 161,720 தொடர்பாக உரிய வரித்தொகை கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பந்தி | ஒவ்வொரு மாதத்தின் போதும் பணிப்பாளர் சபைக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 7 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 156(5) | கணக்குகளிலும் அதனுடன் தொடர்பான ஆவணங்களிலும் பதிவுகள் அழிக்கப்படலாகாததுடன் தவறுகள் சீராக்கப்பட வேண்டிய வசனங்கள், தொகைகள் ஆகியவை தனிச் சிவப்பு மையினால் வெட்டப்பட்டு அவ் |

வேறுபாடுகளுக்கு மேல் சரியான வசனமும் தொகைகளும் சிவப்பு மையினால் எழுதப்பட்டு அவை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரினால் அவரது குறுங்கையொப்பம் இடப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் காசேட்டில் கொடுக்கல் வாங்கல்கள் பதியப்படுகையிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்படுகையிலும் அந்த அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படாது திருத்தப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### (அ) நிதிசார் விளைவுகள்

(i) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்காகக் கிடைக்கப்பெற்ற ரூபா 10,505,200 தொகையான திறைசேரி மானியம் கருத்திற்கொள்ளப்பட்டதை அடுத்து மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 1,511,302 தொகையான மிகையாகக் காணப்பட்டதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா 13,100,000 தொகையான திறைசேரி மானியங்கள் கருத்திற் கொள்ளப்பட்டதை அடுத்து முன்னைய ஆண்டின் போது ரூபா 1,317,913 தொகையான பற்றாக்குறை ஏற்பட்டமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 2,829,215 தொகையால் முன்னேற்றம் ஒன்றினைக் காட்டியது.

(ii) 2009 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2010 ஆம் ஆண்டின் போது பாடநெறி வருமானமும் நானாவித வருமானமும் ரூபா 16,215,279 ஆல் அதிகரித்திருந்தமை மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாகியது.

(ஆ) விபரமான நிதிசார் மீளாய்வு

---------------------------------------------

(i) நிறுவகத்தின் மொத்த வருமானத்தில் ரூபா 10 மில்லியன் அல்லது 31% திறைசேரி மானியங்களையும் ரூபா 23 மில்லியன் அல்லது 69% நிறுவகச் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானங்களையும் உள்ளடக்கியிருந்தன.

(ii) நிறுவகத்தின் மொத்த வருமானத்தில் 72% செயற்பாட்டு வடவடிக்கைகளில் இருந்து உழைக்கப்பட்ட வருமானங்களைக் கொண்டிருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

| ஆண்டு | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நடாத்தப்பட்ட பாடநெறிகள் | 227 | 108 | 129 | 09 | 24 | 73 | 75 | 06 | 45 |
| பங்குபற்றியவர்கள் | 8721 | 4451 | 3545 | 266 | 663 | 3417 | 3694 | 346 | 1,449 |

(அ) 2002 ஆம் ஆண்டின் போது 227 பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டின் போது அது 45 பாடநெறிகளாகக் குறைவடைந்திருந்தன. 2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் பாடநெறிகள் நடாத்தப்படும் சதவீதம் 2010 ஆம் ஆண்டின் போது 20% வரை குறைவடைந்திருந்தது.

2004 ஆம் ஆண்டின் பின்னர் நடாத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகளின் அளவு குறைவடையக் காரணம் 2004 நவம்பர் மாதத்தின் போது செயற்படுத்தப்பட்ட மீளமைப்பு வேலைத்திட்டமாகும். அதன் கீழ் நிறுவகத்தின் 35 ஊழியர்கள் சேவையில் இருந்து அகன்றிருந்ததுடன்

அவர்களில் பயிற்சிப் பிரிவிற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட 11 பேர் காணப்பட்டதுடன் மூன்று பேர் மாத்திரமே எஞ்சியிருந்தனர். இதற்கு மேலதிகமாக மீளமைப்பு வேலைத்திட்டத்தினால் நிறுவகம் மூடப்பட்டுள்ளது என்ற செய்தி பெருந்தோட்ட துறையில் பரவியது. இதன் காரணத்தினால் 2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2005 ஆம் ஆண்டு முதல் 2010 வரையான காலப்பகுதியின் போது நடாத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகளின் அளவு குறைவடைந்ததாக தலைவரால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2002 ஆண்டின் போது பாடநெறிகளில் பங்குபற்றியோரின் எண்ணிக்கை 8,721 ஆனதுடன் 2010 ஆம் ஆண்டின் போது 1,449 வரை குறைவடைந்திருந்தது. இதன் பிரகாரம் 2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பங்குபற்றியோரின் சதவீதம் 2010 ஆம் ஆண்டின் போது 17% வரை குறைவடைந்திருந்தது.

(இ) 1979 இன் 45 ஆம் இலக்க தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவக அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் கருத்தரங்கு, செயலமர்வுகள், மற்றும் மாநாடுகளை ஒழுங்குபடுத்தல், சஞ்சிகைகள் வெளியிடுதல் என்பன அடிப்படைக் குறிக்கோளாகக் காணப்பட்டன.

எவ்வாறெனினும், பெருந்தோட்டத் துறையில் தொழிலில் ஈடுபடும் ஊழியர்களின் எண்ணிக்கை 2 மில்லியனுக்கு கூடுதலான போதிலும் 2010 ஆம் ஆண்டின் போது நிறுவகத்தினால் 1,449 ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர். அதாவது 0.07% மாத்திரமேயாகும்.

(ஈ) நிறுவகத்தின் 2010 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு வருமானம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | ரூபா 000 |
|---|---|
| | ------------- |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான வருமானம் | 10,396 |
| கட்டிடங்களை வாடகைக்கு வழங்கப்படுவதனால் பெறப்பட்ட வருமானம் | 11,203 |
| வட்டி வருமானம் | 1,014 |
| நானாவித வருமானம் | 438 |

செயற்பாட்டு வருமானத்தில் கூடுதலான அளவு கட்டிடங்களை வாடகைக்கு வழங்கப்படுவதனால் உழைக்கப்பட்டிருந்தது.

**2.2.2 பாடநெறிகள் நடாத்தல் - 2010**

| 2010 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட பாடநெறிகளின் பெயர் | செயற்பாட்டுத் திட்டத்தின் படியாகத் திட்டமிடப்பட்ட அளவு | உள்ளபடியாக பாடநெறிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| கல்வி மற்றும் தொழிற் துறை நிகழ்ச்சித்திட்டங்கள் | 14 | 8 |
| தொழிநுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 4 | - |
| திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 4 | 5 |
| செயற்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 35 | 8 |
| விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 | 13 |

| | | |
|---|---|---|
| முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 6 | 6 |
| வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1 | 1 |
| வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 3 | 3 |
| பெருந்தோட்ட பயிற்சியாளர்களுக்காக அறிமுக நிகழ்ச்சித்திட்டங்கள் | 1 | 1 |

(அ) 4 தொழிநுட்ப அபிவிருத்தி பாடநெறிகள் நடாத்தப்பட்டு 60 பேரைப் பயிற்றுவிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் இப் பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாயிகளைப் பயிற்றுவிப்பதற்கான 35 பாடநெறிகள் நடாத்தப்பட்டு, 1750 பேரைப் பயிற்றுவிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 8 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டு 257 பேர் மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.

## 2.3 நிறுவக வளங்கள் வேறு நிறுவகத்தின் பயன்பாட்டிற்கு எடுக்கப்படல்

நிறுவகத்தின் ஒலி ஒளிப் பிரிவின் பயன்பாட்டிற்காக ரூபா 1,224,380 தொகைக்குக் கொள்வனவு செய்யப்பட்ட ஸொனி வகையிலான வீடியோ கமரா 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்திக்கு முரணாக கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

**2.4 உள்ளகக் கணக்காய்வு**

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(5)(ம) மற்றும் பீஈடீ 12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.7.5 ஆம் பிரிவின் பிரகாரம் இந் நிறுவகம் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.5 விளைவற்ற சொத்துக்கள் மற்றும் காணாமற் போன பொருட்கள்**

(அ) 1505 சதுர அடியிலான நிறைவேற்று உத்தியோகபூர்வ வதிவிடமும் 745 சதுர அடியிலான ஒலி ஒளிப் பிரிவும் 2004 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

(ஆ) தற்போது பயன்படுத்தப்படாத 109 பொருட்கள், செயற்படாத 33 பொருட்கள், பழுதான மற்றும் உடைந்த 77 பொருட்கள் என்பன தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கஸட் ரெக்கோடர் மற்றும் புரொஜெக்டர்கள் போன்ற பொருட்கள் காணாமற்போயிருந்ததுடன் அது தொடர்பாக இது வரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 கூட்டுத்திட்டம் செயற்பாட்டுத்திட்டத்துக்கு இணைவாக பேணப்பட்டிருக்கவில்லை.**

2010 – 2015 ஆம் ஆண்டுகளை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டுத்திட்டம் மற்றும் 2010 செயற்பாட்டுத் திட்டத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் ஏற்பாட்டுத் தொகைகளுக்கிடையே 11% முதல் 455% வரையான வேறுபாடுகள் காணப்பட்டன.

## 2.7 பாதீடு

நிறுவகத்தினால் மீளாய்வாண்டின் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் மதிப்பிடப்பட்ட செலவினத்தையும் உள்ளபடியான செலவினத்தையும் ஒப்பிடுகையில் 12% முதல் 100% வரையான வீச்சில் விலகல்கள் அவதானிக்கப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட வருமானத்தையும் உள்ளபடியான வருமானத்தையும் ஒப்பிடுகையில் செலவினத்தையும் உள்ளபடியான செலவினத்தையும் ஒப்பிடுகையில் 37% முதல் 134% வரையான வீச்சில் விலகல்கள் காணப்பட்டன. இதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான ஒரு முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தியிராமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் காலத்துக்குக் காலம் நிறுவகத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கொள்வனவுகள்

(இ) பாடநெறிகளை நடாத்துதல்